செ.வெ.எண்: 47 நாள்: 16.11.2021

**விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவ மழையின் காரணமாக வீடுகள் சேதமடைந்த 146 நபர்களுக்கு ரூ.6.35 இலட்சம் மதிப்பீட்டில் நிவாரண உதவிகளை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கினார்.**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவ மழையின் காரணமாக வீடுகள் சேதமடைந்த 146 நபர்களுக்கு ரூ.6.35 இலட்சம் மதிப்பீட்டில் நிவாரண உதவிகளை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் இன்று (16.11.2021) பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பெய்த தொடர் கன மழையின் காரணமாக பல்வேறு வீடுகள் முழுமையாகவும், பகுதியளவும் சேதமடைந்தது. சேதமடைந்த வீட்டினை சரிசெய்திடும் வகையில் 146 நபர்களுக்கு ரூ.6.35 இலட்சம் மதிப்பீட்டில் நிவாரண உதவித்தொகையினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கினார்.

தொடர்ந்து பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் 7 நபர்களுக்கு பசுமை வீடுகள் கட்டுவதற்கான ஆணையினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் வழங்கினார்.

நிவாரண உதவிகள் வழங்கி மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் பேசியதாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றதிலிருந்து பொதுமக்கள் பயனடையும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக ஊரகப்பகுதிகளில் வீடுகளற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீடு வழங்கப்பட வேண்டும் எனவும், வீட்டுமனைப்பட்டா இல்லாதவர்ளுக்கு வீட்டுமனைப்பட்டா மற்றும் ஏனைய அனைத்து அரசு நலத்திட்ட உதவிகளையும் சென்றடைய வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும். கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகளை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி இன்றைய தினம் கனமழை காரணமாக வீடுகள் சேதமடைந்த 146 நபர்களுக்கு வீட்டினை சரிசெய்திடும் வகையில் ரூ.6.35 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது என மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து பத்திரிக்கையாளர்கள் தினத்தினை முன்னிட்டு பத்திரிக்கை துறையினை சார்ந்த அனைவருக்கும் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் பத்திரிக்கையாளர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராஜசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆர்.சங்கர். செஞ்சி ஒன்றிய குழு தலைவர் திரு.விஜயகுமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.